# சிறந்த மேலாண்மை அதிகாரிகளாக, தொழில் முனைவோராக, ஏற்றுமதியாளராக ஏற்றம் காண வழி காட்டுகின்றோம்!

**- திரு. ஆர். அசோகன்**
**செயல் இயக்குனர், இந்திய வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு மையம் (CITEP)**

தொழில் முனைவோர் மற்றும் ஏற்றுமதி செய்வதில் ஆர்வமுள்ளவர்கள் அதிகமாகி வரும் காலம் இது. அதிலும் தாங்கள் ஈடுபடும் துறையைப் பற்றிய முழுமையான அடிப்படை அறிவை, பயிற்சியை பெற விழையும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. தொழில் முனைவில், ஏற்றுமதி மேலாண்மையில், மற்றும் பல்வேறு துறை நிறுவனங்களில் ஒரு சிறந்த மேலாளர்களாக (Executives) பணிபுரிவதில் திறன் சார்ந்த பயிற்சிகளையும் விபரங்களையும் இளைஞர்களுக்கு ஒருசேர அளிக்கும் தரமான பயிற்சி மையங்கள் எளிதாகக் கிடைப்பதில்லை. ஆர்வமுள்ள அத்தகைய இளைஞர்களுக்கான பயிற்சியுடன் கூடிய படிப்பை ஒரு முதுநிலை பட்டய சான்றிதழுடன் (Post Graduate Diploma) புகழ் பெற்ற அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைந்து எதிர்பார்க்கும் வேலை வாய்ப்பு, தொழில் முனைவு, சுய தொழில், ஏற்றுமதி வர்த்தகம் என பல வகையிலும் வழிகாட்டி உதவி வருகிறது. சென்னையை மையமாக கொண்டு இயங்கி வரும் 'இந்திய வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு மையம்' (Centre for Indian Trade and Export Promotion - சுருக்கமாக CITEP).



திரு.ஆர். அசோகன்




**இடமிருந்து வலமாக: திரு. ஹசனைன் மொஹம்மதலி,** CEO - Wig-O-Mania, UK – ஆலோசகர், CITEP-ன் ஆலோசனை குழுமம். **திரு. ஆர். அசோகன்,** செயல் இயக்குனர், CITEP. Rtn. **திரு. கே.எஸ். கமாலுதீன்,** நிர்வாக இயக்குனர், Blue Bharath Exim Private Limited and B-Accuracy Infotech – ஆலோசகர், CITEP-ன் கல்விக் குழுமம். **திரு. எம்.எஸ்.எஸ். ரவி,** கூடுதல் இயக்குனர் (ஓய்வு), தொழில் மற்றும் வணிக துறை மற்றும் தொழில் மற்றும் ஏற்றுமதி வழிகாட்டி அமைப்பு, தமிழக அரசு – ஆலோசகர், CITEP-ன் கல்விக் குழுமம், **திரு.அ. ஸ்ரீராம்,** இயக்குனர் (வணிக மேம்பாடு), CITEP.

இந்த மையத்தின் செயல்பாடுகள் மற்றும் பயிற்சி விவரங்கள் பற்றி CITEP–ன் செயல் இயக்குனரான **திரு. ஆர். அசோகன்** விரிவான நேர்காணலை தொழில் நேசனுக்கு வழங்கினார். இது குறித்து காண்போம்.

**இந்திய வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு மையம் Centre for Indian Trade and Export Promotion (CITEP) அமைப்பை நிறுவியதன் நோக்கம் என்ன?**

**நமது நாட்டில் பெரும்பான்மையானோர்:**

- உயர்கல்வி முடித்தபின் அவர்களின் படிப்பிற்கு மற்றும் திறனுக்கு ஏற்றவே வேலை வாய்ப்பு பெறுவதில்;
- படித்த பின் சொந்தமாக சுயதொழில் உற்பத்தி கூடம் அதிநவீன டெக்னாலஜி உதவியுடன் தொடங்குதல்;
- சொந்தமாக ஏற்றுமதி மற்றும் அதனை சார்ந்த தொழில் செய்வதில் முனைவுடன் உள்ளனர்.
- பட்டப்படிப்பு மட்டுமே ஒருவருக்கு தகுந்த வேலை வாய்ப்பை பெற்றுத்தராது. படிப்புக்கு இணையான திறன், மேலாண்மை மற்றும் செயல் ரீதியாக வெற்றிகரமாக மிளிரும் குணநலன்களை வேலை வாய்ப்பை வழங்கும் நிறுவனம் மிகவும் எதிர்பார்க்கும்.
- ஏற்றுமதி செய்வதற்கு மற்றும் சுயதொழில் அல்லது உற்பத்தி கூடம் ஆரம்பிக்க சிறந்த தொழில் தேர்வு மற்றும் பல்வேறு நிதி உட்பட தேவை.

மேற்கண்ட விருப்பங்களில் வருபவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு பல்வேறு அமைப்புகள் இருப்பினும் ஒரு முழுமையான படிப்புடன் கூடிய திறன் பயிற்சி மற்றும் படித்தபின் முழுமையாக செயல்படுத்த மற்றும் கடைசிவரை உடனிருந்து உதவி புரியும் அமைப்பு செயல்முறையில் இல்லை என்பதை அறிந்து, உணர்ந்து அவற்றை செயல்படுத்துவதே எங்களது பிரதான நோக்கமாகும்.

### CITEP எவ்வாறு துணை நிற்கும்:

பட்டப்படிப்பு முடித்தவுடன் ஒரு நல்ல வேலை வாய்ப்பு தேடுபவர்களுக்கு படிப்புடன் கூடிய திறன் பயிற்சி, அவர்களின் கல்வித் தகுதி மற்றும் விருப்பம், ஈடுபாடு போன்றவைகளை கருத்தில் கொண்டு அவர்களை ஒரு நிறுவனத்தில் அதிகாரி அந்தஸ்தில் அமர்த்துவதில் உதவி புரிதல் மற்றும் அவர்களின் உத்தியோகத்தில் மேலும் மேலும் வளர காலவரையற்ற உதவியளித்தல்.

சுயதொழில், வணிகம் செய்ய விரும்பினால் பல்வேறு வாய்ப்புகளை (உள்/வெளிநாட்டு சந்தைப் படுத்தல்) அறிவித்து அதில் விருப்பமானதை தெரிவு செய்ய வைத்து அதனை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு துணைபுரிதல்.

சொந்தமாக தொழில் நிறுவனம் அமைக்க விருப்பம் உள்ளவர்களுக்கு அவர்களின் படிப்பு, திறன் மற்றும் பிற விஷயங்களை கருத்தில் கொண்டு அவர்களுக்கு தகுந்த டெக்னாலஜி, தொழில் நிறுவனம் முழுமையாக அமையும் வரை உடனிருத்தல், தேவையான அனுமதி, முதலீடு, நடைமுறை செலவுகள் வணிக வசதி, அரசு வழங்கும் மானியம், உற்பத்திப் பொருள் விற்பனை மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற வற்றில் துணை புரிதல் போன்ற வாய்ப்புகளை வழங்கி அவர்களை மிக சிறந்த தொழிலதிபர் களாக மேம்படுத்துதல்.

ஏற்றுமதியில் விருப்பம் இருப்பவர்களுக்கு எந்த பொருள்களுக்கு எந்த நாடுகளில் தேவையுள்ளது. உற்பத்தி / கொள்முதல் செய்யும் முறைகள், இறக்குமதியாளர்களை அறிமுகம் செய்தல், தேர்வு செய்யும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நடைமுறைகள், விலை நிர்ணயம், ஏற்றுமதி செய்வதற்கு உதவி புரிதல், ஏற்றுமதி உற்பத்தி / கொள்முதல் பணத் தேவைகளை ஏற்பாடு செய்யும் வழிமுறைகள், இறக்குமதி யாளர்களிடம் பணம் பெறும் முறைகள், ஏற்றுமதி செய்த பின் ஏற்றுமதி செய்யும் குறிப்பிட்ட பொருட்களுக்காக அரசு வழங்கும் பிரத்தியேக சலுகைகள் பெறும் முறைகளை வழங்குதல் மற்றும் பிற சேவைகள் உடனிருந்து வழங்குதல்.

மேற்கண்ட அனைத்து சேவைகளையும் CITEP மையம் அண்ணாமலை பல்கலைக் கழகத்துடன் இணைந்து 140 மணி நேர நேர்முக பயிற்சி மற்றும் hybrid என்று சொல்லப்படும் இணையதளம் வழியாக பன்முகக் கல்விமுறை மூலம் முதுநிலை பட்டயப் படிப்பினை (Post Graduate Diploma in "Export Management and Entrepreneurship") பயில்பவர்களுக்கு வழங்கும்.

### மேற்கண்ட படிப்பில் சேர்வதற்கான தகுதிகள் குறித்து....

ஒரு ஆண்டு முதுகலை பட்டய படிப்பில் (PGDEME) சேர்வதற்கு பட்டதாரிகளாக இருக்க வேண்டும். முதுகலை படிப்பு படிப்பவர்களும் சேரலாம். அவர்கள் இப்பட்டயப் படிப்பை நிறைவு செய்யும் போது திறன்மிகு அதிகாரிகளாக, சிறந்த தொழில் முனைவோராக, ஏற்றுமதியாளர்களாக செயல்படும் தகுதியை கொண்டவர்களாக வெளி வருவார்கள். வளமான எதிர்காலத்தை விரும்பும் எத்துறையை சார்ந்தவர்களாயினும், மேலும் விவசாயம் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ளோர்கள், சிறு ஏற்றுமதியாளர்கள், ஏற்றுமதியில் ஈடுபட விரும்புவர்கள், பெண் தொழில் முனைவோர், ஆகிய அனைவருக்கும் இந்த பயிற்சியுடன் கூடிய கல்வியானது சிறப்பான எதிர்காலத்தை அவர்களுக்கு உருவாக்கித் தருகிறது.

### CITEP பட்டயப் படிப்பின் சிறப்பம்சங்கள் என்னென்ன?

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் சேர்ந்து எங்கள் மேம்பாட்டு மையம் மிக தரமான நடைமுறைகள் கூடிய தொழில் முனைவு, வர்த்தக நிர்வாகம், ஏற்றுமதி குறித்த அனைத் தையும் முழுமையாக அவர்களுக்கு பயிற்று விக்கிறது. வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி மேம்பாடுகள் பற்றிய உலக அளவிலான பார்வையை எங்கள் பயிற்சி முறைகள் அவர்களுக்கு கற்பிக்கின்றன. படிப்பு நிறைவுப் பெற்ற பின் சொந்தமாக




தொழில் தொடங்கி சிறப்பாக நடத்தும் தன்னம்பிக்கையை அவர்களிடம் படிக்கும் போதே உருவாக்குவதில் முனைப்புடன் உள்ளோம். எல்லா துறைகளிலும் அதிகாரி (Executives) மட்டத்திலான வேலை வாய்ப்பை நாடுபவர்களுக்கு, இந்த பட்டயப்படிப்பு ஒரு சிறந்த தகுதியாகவும், பன்முகத் தேர்ச்சி பெற்றவராகவும் நிலை நிறுத்தும்.

**நேர்முக பயிற்சி எந்தெந்த இடங்களில் வழங்கப்படும்?**

சென்னை, கோயம்புத்தூர், பெங்களூர், விஜயவாடா, தார்வாட், நியூடெல்லி, ஐதராபாத், மும்பை, கொல்கத்தா, அகமதாபாத் நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. சேர்க்கை எண்ணிக்கையை பொறுத்து இறுதி செய்யப்படும். மேலும், அனைத்து நேர்முக பயிற்சி இடங்களும் குளிர்சாதன மற்றும் அனைத்து வசதிகளை கொண்டதாகவும் எளிதாக வந்து செல்வதற்கும், நகரின் பிரதான இடங்களில் அமைந்திருக்கும். இந்த பட்டயப் படிப்பு ஆங்கில மொழியில் நடத்தப்படுவதாகும். இருப்பினும் தேர்ச்சி பெற்ற மிக அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் ஆங்கிலம் மற்றும் பிராந்திய மொழிகளில் மிக எளிதில் புரியும்படி பன்முக முறைகளில நேர்முகப் பயிற்சியினை வழங்குவார்கள்.

**CITEP இந்திய ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கு ஆர்வம் உள்ளவர்களுக்கு எவ்வாறு உதவும்?**

உலகின் அதி முக்கிய வியாபார கேந்திரங்களில் ஜஸ்ட்-இன்-டெலிவரி கிடங்குகளை அமைத்து குறிப்பிட்ட முக்கிய கேந்திரங்களில் நல்ல சந்தை வாய்ப்புள்ள இந்திய பொருள்களை சந்தைபடுத்துவதில் துணை இருப்பது; ஏற்றுமதியாளர்களை முக்கிய நாடுகளுக்கு அழைத்துச் சென்று நேரிடையாக இறக்குமதியாளர்களை அறிமுகப்படுத்தி ஊக்குவிப்பது - இதன் மிக முக்கிய அம்சம் CITEP அதன் உலகளாவிய தொடர்பு மூலம் மிக நேர்மையான இறக்குமதியாளர்களை தொடர்பு கொண்டு அவர்களின் பின்புலங்களை நன்கு அறிந்தபின் ஏற்றுமதி

யாளர்களுக்கு முதலில் பரஸ்பர அடிப்படை தொடர்பு ஏற்படுத்தி அதன் பின்பே ஏற்றுமதி யாளர்களை அந்த நாடுகளுக்கு அழைத்து சென்று வியாபார வாய்ப்புக்கு வழியமைத்து கொடுப்போம். இந்த சேவைக்கு **CITEP** மிக அதிகமான உலகளாவிய பொருள்கள் சந்தைபடுத்தும் ஆராய்ச்சிகளை மிகவும் அனுபவம் மிக்க நிபுணர்கள், ஆலோசகர்கள், பல்வேறு வியாபார அமைப்புகள், அரசுகளின் தொழில் வணிக பிரிவுகள் மற்றும் பலரின் தொடர்புகள் **CITEP**க்கு மிகவும் பக்க பலமாக உள்ளது. மேலும் பிரத்தியேக **Trade Fairs / Exhibitions**-களை வாய்ப்புள்ள நாடுகளில் பல்வேறு சிறந்த தொடர்புகளின் மூலம் நடத்தி நேரிடையாக இறக்குமதியாளர்களை வருகை புரிய செய்து வியாபார ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி தருவதுடன் பல்வேறு பொருட்குழுமங்களின் (Product Sectors) சிறந்த இறக்குமதியாளர்களை நம் நாட்டிற்கு வரவழைத்து நமது ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் வியாபார ஒப்பந்தங்களை செம்மை படுத்தி தருவதில் **CITEP** தனது முழுமையான பங்காற்றும்.

**CITEP தரும் பயிற்சிக்கும் மற்றவைக்கும் மிக பெரிய வித்தியாசம் என்ன? குறிப்பாக வர்த்தகம், ஏற்றுமதி சார்ந்த தொழில் முனைவில் ஈடுபட எண்ணுவோர்க்கு CITEP எப்படி துணை நிற்கிறது?**

நமது நாட்டில் பொதுவாக பல அமைப்புகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஏற்றுமதி பயிற்சி அளிக்கின்றன. அத்தகைய பயிற்சி, கருத்து கூடங்களில் பொதுவாக ஏற்றுமதி நடைமுறைகளை கற்று தருகின்றனர். இன்றைய தகவல் தொடர்பு வளர்ச்சியில் இணையதளங்கள் மூலமாக இதை எளிதாக அறியலாம். பொதுவாக இந்த பயிற்சிக்கு வருபவர்களின் நோக்கம் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற ஒரே குறிக்கோள்தான்.

CITEP தனது பயிற்சியில் எளிதான முறையில் ஏற்றுமதி சந்தைப்படுத்தும் முறைகளை பிரதானமாக பல எடுத்துக்காட்டுகளுடன் இத்துறை வல்லுனர்களின் மூலம் செயல் பயிற்சி அளித்து தேர்ந்த பின்பு அவர்களை நேரிடையாக ஏற்றுமதி செய்வதற்கு உடனிருந்து பல்வேறு வகைகளில் துணைபுரிகிறது. பயிற்சி பெறுபவர்கள் அவர்களின் பொருள்கள் ஏற்றுமதியில் மட்டும் கவனம் செலுத்த வைத்து மற்ற ஏற்றுமதி சம்மந்தப்பட்ட நடைமுறைகளை உடனிருந்து, துணை புரிந்து எளிதாக்குகிறது. இந்த சேவைகளில் CITEP பயிற்சியாளர்களுடன் முழுவதுமாக துணையிருப்பதால் ஒரு மிக சிறந்த ஏற்றுமதியாளராக குறுகிய காலத்தில் பிரகாசிக்க முடியும்.

இது போன்றே CITEP-ன் தனது பட்டயப் படிப்பு படிக்கும் ஆர்வலர்களுக்கு அதிகாரி மட்டத்திலான நல்ல நிறுவனங்களில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தருவதில், சுயதொழில் ஏற்படுத்தி தருவதில், ஒரு சிறந்த தொழில் முனைவோர் அல்லது ஏற்றுமதியாளராக உருவாக்குவதில் மிகவும் தனித்துவமாக இருக்கும். உண்மையில் இதுதான் தற்போதைய தேவை. CITEP-ன் உண்மையான சேவையும் இதுதான்.

இத்துறை ஆர்வலர்களின் நோக்கம்... ஒரு தலைசிறந்த பயிற்சியுடன், வெற்றிகரமான மனிதராக இச்சமுதாயத்தில் வலம் வருதல். CITEP அதன் தனித்துவமான நடைமுறைகளின் மூலம் அதனை நிறைவேற்றி தருவதில் உலகளாவிய தலைசிறந்த நிபுணர்கள், நவீன வியாபார வாய்ப்புகளை வழங்குபவர்கள், திறன் மிகு நவீன technology / know-how வழங்குபவர்கள் மற்றும் பல பன்முக அறிஞர்கள், ஆலோசகர்களின் சேவை மனப்பான்மையுடன் கூடிய பங்களிப்பின் மூலம் மிகவும் சிறப்பாக தருவதில் CITEP முனைப்புடன் உள்ளது.

**CITEP எந்த நோக்கத்தின் முகமாக அமைக்கப்பட்டுள்ளது? CITEP நிர்வாக அமைப்பின் பின்னணியில் யாரெல்லாம் உள்ளனர்?**

CITEP லாப நோக்கமற்ற அமைப்பாகும். வணிகம், தொழில், விவசாயம் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக்காக இந்திய அரசின் Ministry of Corporate Affairs-ன் பதிவு பெற்ற அமைப்பாகும்.

**CITEP அமைப்பின் முக்கிய குறிக்கோள்:**

- உற்பத்தி, வர்த்தகம், ஏற்றுமதி மற்றும் அதன் துணை நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்;



At the MoU signing are (from left) Mr. R. Asokan, Executive Director, CITEP, Prof. Dr. K. Arumugam, Registrar, Prof. Dr. S. Manian, Vice Chancellor, and Prof. Dr. K. Manivannan, Director (Academic Affairs), Annamalai University.

- உள்நாட்டு வணிகம் மற்றும் சர்வதேச வணிகத்துக்கு உறுதுணையாக இருந்து சந்தைப்படுதலை மேம்படுத்தி நேரடி தொடர்புகளை ஏற்படுத்தி விரிவான நெட்ஒர்க் அமைத்தல்;
- தேசிய மற்றும் சர்வதேச அளவில் கருத்தரங் குகள், கண்காட்சிக்கு ஏற்பாடு செய்தல்;
- தொழில் முனைவு மேலாண்மை கருத் தரங்கம், கருத்துப்பட்டறை பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்தல்.
- வெளிநாடுகளில் கிடங்குகளை (Warehouse) அமைத்தல் மற்றும் முழு அளவில் சந்தைப்படுத்துதலுக்கு துணையிருத்தல்.
- தொழிற்பேட்டைகள், ஒருங்கிணைந்த உயர் தொழில்நுட்ப வேளாண் ஒப்பந்த முறை பண்ணைகளை விவசாயி – பொதுமக்கள் – பன்முக இயற்கை சார்ந்த நிபுணத்துவம் கொண்ட உள்நாடு, வெளிநாட்டு அமைப்புகளின் கூட்டோடு உலக சந்தை வாய்ப்புடன் நவீன விவசாயம் செய்வதற்கு வாய்ப்பு அமைத்து கொடுத்தல்.
- அதிக நம்பத்தன்மை கொண்ட இறக்குமதி யாளர்களை அடையாளம் கண்டு இந்திய ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

CITEP அதன் உலகளாவிய தொடர்புகள் மற்றும் பிரதிநிதிகள், முன்னணி சர்வதேச முகமைகளின் சேவைகளை பரஸ்பர புரிதல் அடிப்படையில் பயன்படுத்துகிறது.

### CITEP நிர்வாக அமைப்பு:

CITEP செயல் இயக்குனராக (Executive Director) **திரு. ஆர். அசோகன்** அவர்கள் உள்ளார். அவரின் கீழ் நிர்வாக அமைப்பு செயல்படுகிறது. தகுந்த ஆலோசனைகளை கொடுத்து வழி நடத்த CITEP அமைப்பானது

Board of Advisory என்ற குழுமத்தின் தேசிய மற்றும் உலகளவில் பிரபலமான தொழில் அதிபர்கள், தொழில், வணிகம், விவசாயம், ஏற்றுமதி மற்றும் பல்துறை சார்ந்த வல்லுனர் களின் சீரிய ஆலோசனை பெறுகிறது.

CITEP தனது Board of Studies குழுமத் திலுள்ள பல்வேறு தலைசிறந்த கல்வியாளர்கள், வணிகம், தொழில், நவீன விவசாயம், ஏற்றுமதி மற்றும் அதனை சார்ந்த அமைப்புகளின் நிபுணர்களின் ஆலோசனையும் பயிற்றுவிக்கும் updated நவீன உத்திகளையும் பயிற்சியாளர் களுக்கு புகழ் பெற்ற அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் துணையுடன் உலகத்தரத்துடன் வழங்குவதில் பெருமை கொள்கிறது.

**CITEP-ன் எதிர்கால திட்டங்கள் என்ன?**

சுருக்கமாகச் சொல்வதானால்...

- வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்கு ஒரு சிறந்த industrial Estate ஒன்று அமைத்து அவர்கள் நாடு திரும்பும் போது ஒரு சிறந்த தொழில்முனைபவர்களாக உருவாக்குதல். அமைக்கப்படும் Industrial Estate சிறந்த technology / know-how, அனைத்து வசதிகள், தேவையான நிதி மற்றும் அரசு சலுகைகள், சந்தை படுத்துதல் மற்றும் state-of-the-art நிர்வாக வசதிகளை கொண்டிருக்கும்.
- Engineering College, Polytechnic மற்றும் பல்வேறு துறைகளில் பயிலும் மாணவர்கள் பல்வேறு அறிய கண்டுபிடிப்புகளை அவர்களின் படிப்பின் ஒரு பகுதியாக உருவாக்கியுள்ளனர். இவைகள் சந்தைப் படுத்துவதில் ஏற்படும் குறைபாடு காரணமாக அவர்களின் ஒப்பற்ற அறிவாற்றல் வீணாகிறது. இவற்றை தெரிவு செய்து முறைப்படுத்தி மேலே குறிப்பிட்ட அம்சங் களுடன் சிறந்த தொழில் முனைவோர் களை உருவாக்குதல்.
- பெண் தொழில் முனைவோர்களுக்கு **micro, small** பசுமை உற்பத்தி வளாகங்களை ஏற்படுத்தி அந்த பொருள்களை சீரிய முறையில் சந்தைபடுத்தி தருதல்; மற்றும் இந்திய பொருட்கள் மற்றும் சேவை களுக்கு அயல்நாடுகளில் இடைநிலை தவிர்த்து நேரிடை வியாபார வாய்ப்புகளை வழங்குதல்.
- ஒருங்கிணைந்த உயர் தொழில் நுட்ப வேளாண் ஒப்பந்தமுறை பண்ணைகளை விவசாயி - பொதுமக்கள் - பன்முக இயற்கை சார்ந்த நிபுணத்துவம் கொண்ட உள்நாடு மற்றும் வெளிநாட்டு அமைப்புகள் கூட்டோடு உலக சந்தை வாய்ப்புடன் நவீன விவசாயம் செய்வதற்கு வாய்ப்பு அமைத்து கொடுத்தல்.

இவை அனைத்தையும் CITEP தனது உலகளாவிய சிறந்த தொடர்புகள் மூலம் லாப நோக்கமின்றி வழங்குவதற்கு ஏற்பாடுகளை செய்து வருகிறது.

**இந்த பட்டய படிப்பிற்கான சேர்க்கை முறை என்ன?**

2017-18-ம் ஆண்டிற்கான சேர்கை தொடங்கி விட்டது. முழு படிப்பிற்காக பல்கலைக்கழகம் நிர்ணயித்த கட்டணம், தேர்வு கட்டணம், பயிற்சிக்கு பிந்தைய சேவை விவரங்களுக்கு கீழே கொடுத்துள்ள CITEP அலுவலகத்தை நேரிலோ, மின்னஞ்சல் அல்லது கைபேசி, தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ளவும்.

**நிறைவாக ...CITEP-ன் முதுநிலை பட்டய படிப்பு மற்றும் படிப்பிற்கு பிந்தைய சேவை-கள் (Post Course Facilities) குறித்து.....**

நாட்டின் ஏற்றுமதி வர்த்தகம் ஒரு நல்ல வளர்ச்சியை நோக்கி செல்கிறது. தொழில் தொடங்க மத்திய-மாநில அரசுகள் பல்வேறு சலுகைகள் வழங்குகிறது. அதனால் இத்துறை சார்ந்த சிறப்பு பயிற்சி பெற்றவர்களின் தேவை மிகவும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக தொடர்புடைய ஏற்றுமதிக்கான வாய்ப்புகளும் புதிய வேகம் பெற்றுள்ளன.

இப்படிப்பட்ட அதிமுக்கியத்துவமான சூழலின் காரணமாக வேலை வாய்ப்புகளும் பெருகி

வருகின்றன. தொழில்நுணுக்கம் அறிந்து செயல் படுகிறவர்களால் மட்டுமே வாழ்வில் ஒரு உன்னத நிலையை அடைய முடியும். நீங்கள் நல்ல வேலையை விரும்புகிறீர்களா? நல்ல வருமானத்தை விரும்புகிறீர்களா? சுய தொழில் அல்லது தொழிற்சாலை அமைக்க விரும்புகிறீர்களா? அல்லது, மிக ஏற்றமான ஏற்றுமதியாளர்களாக வாழ்க்கையில் சிறக்க விருப்பமா?

உங்களுடன் உள்ள செயலாற்றலை நிர்வாக ஆற்றலுடன் மேம்படுத்திக் கொள்ள நாங்கள் அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து வழங்கும் இந்த முதுநிலை பட்டய படிப்பும் அதன் பின்பு, உங்களுக்கு உறுதுணையாக இருந்து வழங்கும் சேவைகளும் மிகவும் தனித்துவ மானது. CITEP வழங்கும் ஏற்றுமதி மேலாண்மை மற்றும் தொழில் முனைவு பட்டயப்படிப்பு பிரகாசமான எதிர்காலம், வளமான வருவாயை நிச்சயம் உருவாக்கி தரும் என்கிறார் CITEP-ன் செயல் இயக்குனர் **திரு. ஆர். அசோகன்.**

***உலகெங்கும் இந்தியர்களின் மீதான மதிப்பும், மரியாதையும் அதிகரித்து வருகின்றது. இந்திய இளைஞர்கள் அனைத்து துறை களிலும் தன்னம்பிக்கையுடன் ஈடுபட்டு, வெற்றி பெற்று வரும் வேளையில்... பட்டை தீட்ட தீட்டத்தான் வைரம் ஜொலிக்கும் என்பதை போல பல ஆண்டுகள் ஏற்றுமதி துறையில் பணிபுரிந்து, இந்திய ஏற்றுமதியாளர்கள் வெற்றி பெற்றவர்களாக திகழவேண்டும் என்கிற சீரிய எண்ணத்தோடு பணியாற்றி ஓய்வு பெற்ற பின்பு, இந்திய ஏற்றுமதி துறை மென்மேலும் வளர்ச்சி பெற தன்னுடைய முயற்சிகளை தொடர்ந்து செயல்படுத்தி, ஏற்றுமதி துறையில் தனக்கு கிடைத்த அரிய அனுபவங் களை இன்றைய தலைமுறையினருக்கு கற்றுத் தந்து, இந்திய ஏற்றுமதியாளர்கள், வெற்றியாளர்களாக உலகை வலம் வர திரு. ஆர். அசோகன் எடுத்துள்ள சிறந்த முயற்சிக்கு பாராட்டுதல்களை தெரிவித்து விட்டு கிளம் பினோம்.***



**திரு. ஹரிஸ்மோகன்**
துணை இயக்குனர் மற்றும்
கோயம்புத்தூர் மைய நிர்வாக அதிகாரி

***மேலும் விவரங்களுக்கு***
***தொடர்பு கொள்ளவும்:***
***இயக்குனர்***
**சென்டர் பார் இண்டியன் டிரேட் அண்ட் எக்ஸ்போர்ட் ப்ரோமோஷன்**
**(Centre for Indian Trade and Export Promotion)**
1683, 5வது குறுக்கு தெரு, ராம் நகர் தெற்கு,
மடிப்பாக்கம், சென்னை - 600 091.
தொலைபேசி : 044-48577611 / 98404 66611 / 95660 11100
இமெயில் : citepnetwork@gmail.com
இணையதளம் : www.citep.in

சந்திப்பு: **ரேபா.**
வடிவாக்கம்: **என்.ஜே. கந்தமாறன்**
புகைப்படம்: **பன்னீர்செல்வம்**